முன்னேறாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இச்செய்தியை படிக்கும் போதே, கர்த்தர் நம்முடைய கண்களைத் திறந்தருள்வாராக! “எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்” (சங்கீதம் 121:1) என்ற வசனத்தின்படி நமக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களை நோக்கிப் பார்த்துப் பிழைப்போம். இனிவரும் நாட்களில் இது ஒன்றுதான் நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் காப்பாற்றும்!

அற்புதப் பணியில்
சகோதரி சாந்தி சாலமோன்

**BOOK POST**

To

If Undelivered Please Return To:
**Miracle Ministry**
2/4, Ganapathy Nagar
Vivekanandha Main Road
Kolathur, Chennai - 600 099



# MIRACLE MINISTRY

## அற்புத ஊழியம்

Editor: Sis. SHANTHI SOLOMON
July - 2021

## அற்புத ஊழியம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்



ஒவ்வொரு சனிக்கிழமையும்
காலை 8-00 மணி முதல்
8-30 மணி வரை

**ஏஞ்சல் TV-யில்**

**Sis. சாந்தி சாலமோன்**
செய்தியளிப்பார்

ஒவ்வொரு மாதமும்
முதல் மற்றும் மூன்றாம்
புதன் கிழமைகளில்
பிற்பகல் 12-00 முதல் 12-30 வரை

**நம்பிக்கை TV-யில்**

**Sis. சாந்தி சாலமோன்**
செய்தியளிப்பார்

# ஜுலை 2021 - வாக்குத்தத்தம்

**"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே,**
அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" (புலம்பல் 3:22)

கிருபை என்பது புனிதமானது இதை மனிதனால் கொடுக்க முடியாது. ஆண்டவரால் மட்டுமே இதைக் கொடுக்க முடியும். கர்த்தருடைய கிருபையால் மட்டும்தான் நாம் உயிர் வாழ்கிறோம், நடக்கிறோம், செயல்படுகிறோம். இப்போது உள்ள நாட்களில் கர்த்தர் நம்மீது வைத்துள்ள கிருபையால் தான் நாம் அழியாமல் காக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

கர்த்தருடைய இரக்கங்களுக்கு முடிவே இல்லை. கர்த்தரின் இவ்வார்த்தைகளை நாம் அதிகமாக உணர வேண்டும். அதிலே வசனம் அழகாக உள்ளது. இரக்கம் என்று ஒருமையில் அல்ல இரக்கங்களுக்கு என்று பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் முடிவே இல்லாத மாபெரும் இரக்கம் நம் அனைவர் மீதும் கர்த்தர் வைத்திருக்கிறார். அவரது இரக்கத்தாலும், அவரது கிருபையாலும் தான் நாம் ஒவ்வொரு நாளும் காக்கப்பட்டு வாழ்கிறோம் என்ற நம்பிகையோடு இம்மாதம் கடந்து செல்வோம்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் அற்புதப் பணியில் உங்கள் அன்பு சகோதரி,

**சாந்தி சாலமோன்**

கடந்தப் பல வருடங்களாக உதாரத்துவமான காணிக்கை களினால் இவ்வூழியத்தைத் தாங்கி வந்த உங்களுக்கு என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இவ்வூழியத்தை உங்கள் காணிக்கைகளினாலும், ஜெபங்களினாலும் தாங்குமாறு இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**வங்கிக் கணக்கின் பெயர்:**

Miracle Ministry : A/c. No.0974101019647
Shanthi Solomon : A/c. No. 0974101034594
வங்கியின் பெயர் : Canara Bank,
கிளை : Anna Nagar East
IFSC CODE : CNRB0000974
MICR CODE : 600015005

**அற்புத ஊழியம்**
2/4, கணபதி நகர், விவேகானந்தா மெயின் ரோடு,
கொளத்தூர், சென்னை 60009,
Phone: 044 4867 8077



## நான் கடந்து வந்தப் பாதைகள்
**(சகோதரி சாந்தி சாலமோன்)**

என் அன்பு வாசகர்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள்!

மூன்று மாதம் இடைவெளிக்குப் பின்னர் இக்கட்டுரையை தொடரச் செய்த கர்த்தருக்கு என் முதற்கண் நன்றியைச் செலுத்துகிறேன். பொறுத்துக் கொண்டிருந்த உங்களுக்கும் என் நன்றி. பல நெருக்கமான சூழ்நிலைகள் வந்ததாலும், என் குடும்பம் கொரோனாவினால் பாதிக்கப்பட்டதாலும், என்னால் எழுத முடியவில்லை, தற்பொழுது நாங்கள் யாவரும் சுகத்துடன் இருக்கிறோம். எனக்காக, என் குடும்பத்திற்காக ஜெபித்த ஒவ்வொரு நல்ல உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவிதுக் கொள்கிறேன். என் அன்பு மகன் சாமுவேல் சாலமோன் மரித்து 3 வருடங்கள் கடந்துப் போனது, அவனது நினைவுகள் அதிகமாய் எங்களை வாட்டி வதைக்கிறது. இதற்காக அதிகமாய் ஜெபியுங்கள்.

தொடர்கிறேன், முழு நேர ஊழியத்தை என் கணவர் Dr. John Solomon முழுமையாக செய்தார். ஆனால், நான் மட்டும் திருமணத்திற்குப் பின் வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருந்ததால், வேலைக்குச் சென்றேன். நான் Madras Corporation Ribbon Building-இல் தான் முதலில் Water Works Department - இல் பணிபுரிந்தேன். எங்கள் வீடு ரசாக் கார்டனில் வத்தலகுண்டு ஆறுமுக நகரில் இருந்தது. நான் தினமும் வேலைக்கு ஒன்றரை கி.மீ. தூரம் Bus Standக்கு நடந்து சென்று Bus பிடித்து Central போக வேண்டும். இப்படி வேலையும் செய்து, மாலை வந்தவுடன் ஊழியத்திற்கு செல்ல ஆயத்தமாயிருக்கும் என் கணவர் Dr. John Solomon அவர்களுடன். நான் ஒரு Coffee குடித்து விட்டு, முகம் கழுவி விட்டு, உடனே அவருடன் ஊழியத்திற்குப் புறப்படுவேன். நாங்கள் ஊழியம் முடித்து வீடு திரும்ப சில வேளைகளில் இரவு 12 அல்லது 1 மணிக்கூட ஆகிவிடும். அப்போது என் கணவர் Lambrita Scooter தான் வைத்திருந்தார். அதில் தான் நாங்கள் தினமும் போய் திரும்புவோம். நாங்கள் அதிக கால தாமதமாய் வந்தால், என் அத்தை, என் கணவரின் தாயார் பாக்யம் அம்மாள் கோபப்படுவார்கள். ஒரு பெண் பிள்ளையை அழைத்துக் கொண்டு போய் இப்படி நேரம் கழித்து வராமல் சீக்கிரமாக வரவேண்டும் என்று சொல்வார்கள். திருமணம் முடித்து என் கணவர் வீட்டுக்கு வந்தபின், என் மாத சம்பளத்தை என் கணவரிடம் கொடுத்தேன். உடனே அவர் இதை என் அம்மாவிடம் கொடு என்றார். நானும் அதை என் அத்தையிடம் கொடுத்தேன். என் அத்தை தான் முழு குடும்பத்தையும் கவனித்துக் கொள்வார்கள். நாங்கள் வெளி ஊழியங்கள் செய்து வந்தாலும், ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை மாலை எங்கள் வீட்டில் ஒரு ஜெபக் கூட்டம் நடத்துவோம்.

ஊழியத்தில் இன்று வல்லமையாய் இருக்கும் அநேகர் அந்நாட்களில் அக்கூட்டங்களில் கலந்துக் கொள்வார்கள். அநேக வாலிப பிள்ளைகளை என் கணவர் Dr. John Solomon கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய ஊக்குவித்தவர். அந்த வாலிபர்களுக்கு வேத ஆலோசனைகளையும் தருவார். சில வேளைகளில் என் கணவர் என்னை Office-ற்கு Scooter-இல் கொண்டு விடுவார். அப்படி போகும் போது, நான் ஒரு காலின் மேல் மற்றொரு காலைப் போட்டு, என் ஒரு கையை என் கணவரின் தோளின் மீது வைத்துக் கொண்டு போவேன். இதற்கு உலகத்தார் சில வார்த்தைகளைக் கூட சொன்னார்கள். இவனுக்கு எப்பொழுதும் மனைவியை Bike-ல் வைத்து சுற்றுகிற வேலைதான் என்று கேலி செய்த அநேகர் உண்டு. அதற்கு என் கணவர், நான் ஊரார் மனைவியையா ஏற்றிக் கொண்டுப் போகிறேன் என் மனைவியைத்தானே நான் ஏற்றிக்கொண்டுப் போகிறேன் விருப்பம் இருந்தால் அவரவர் மனைவியை அழைத்துக் கொண்டு போக வேண்டியது தானே என்று கோபமாக சொல்வார். இப்பொழுது இவை எல்லாவற்றையும் நான் ஒவ்வொரு நாட்களிலும் நினைத்துப் பார்த்து அழுகிறேன். எனக்கு திருமணம் நடப்பதற்கு முன் College படிக்கும் போது மிகவும் Style ஆக இருப்பேன். அந்நாட்களில் என் Photo-வைப் பார்த்தால் நீங்கள் யாரும் நம்ப மாட்டீர்கள். ஆனால், திருமணத்திற்கு பின் என் Style எங்கே போனது என்றே தெரியவில்லை. நான் வேலைப் பார்த்த Madras Corporation, Moor Market பக்கத்தில் உள்ளது. அப்போது என்னுடைய நெருங்கிய சிநேகிதி Mary Roseline என்பவள் இவளும் Christian-தான் ஆனால், அவள் வேறு Department (S.W.D) Seevage Water Supply-ல் இருந்தாள். நாங்கள் இருவரும் வேலை முடித்து, மாலையில் Moor Market-க்குப் போவோம் அங்கு வெளியிலுள்ள கடைகளில் குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கும். என் சிநேகிதி வசதி படைத்தவள். எனக்கு அவ்வளவு பணம் இல்லாததால், அம்மா கொடுக்கும் தேநீர் மற்றும் சிற்றுண்டி செலவுகளில் மீதம் வைத்து, அதை எடுத்துக் கொண்டுப் போய் செருப்பு மற்றும் காட்டன் புடவைகளை வாங்குவேன். அப்பொழு தெல்லாம் குறைந்த விலையில் Artificial Jewels-களை புடவைக்கு ஏற்றார்போல் போடுவேன். Madras Corporation-இல் என்னை Cotton Beauty என்று சொல்வார்கள். ஆரம்பத்தில் என்னிடம் 5 புடவை Cotton Sarees தான் இருந்தது. அவற்றை எப்பொழுதும் Iron செய்து மடிப்புக் கூட கலையாமல் உடுத்துவேன். என்னைப் பார்த்து அநேக பெண்கள் இப்படி கட்ட ஆரம்பித்தார்கள். மிக விலை உயர்ந்த புடவைகளை அந்நாட்களில் என்னால் வாங்க முடியாது. காரணம், என் தாயின் நிலைமை, 4 பெண் பிள்ளைகள், அப்பா இல்லை. காலப் போக்கில் 5 புடவை 10 புடவைகளாக ஆயிற்று. என் அம்மாவிடம் ஒன்றே ஒன்று தான் நான் ஆசைப்பட்டு கேட்டேன். அம்மா எனக்கு லாண்டரி Laundry



கடைக்கு மட்டும் காசு கொடுங்கள் என்பேன். என் அம்மா அதைக் கொடுப்பார்கள். இப்படித்தான் அந்நாட்களில் நான் இருந்தேன். திருமணத்திற்கு பின் எனக்கு இப்படி உடுத்த நேரமில்லை. வேலை, ஊழியம், வீடு என்று மாறிவிட்டது. என் கணவர் நீங்கள் யாவரும் அறிந்தவர். அவர் எப்படி உடுத்துவார் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால், அவர் ஏன் சாந்தி இப்படி இருக்கிறாய், என்னைப் போன்று நன்றாக Dress பண்ணிக் கொள் என்று கோபப்படுவார். அதெல்லாம் எனக்கு பெரியதாக தெரியவில்லை. என்னால் முடியவில்லை என்று சொல்லி விடுவேன்.

அந்நாட்களில் ராயபுரத்தில் Richard David Uncle (Perinba Peruvizha Secretary) அவர்களின் வீடு இருந்தது. அவரும் ஒவ்வொரு வாரமும் அவர் வீட்டிலேயே ஜெபக் கூட்டம் நடத்துவார். அநேக பிரசங்கியார்கள் அங்கு வந்து ஊழியம் செய்வார்கள். சில வேளைகளில் நாங்கள் இருவரும் போய் ஊழியம் செய்வோம். Uncle, Aunty பிள்ளைகள் சுனிதா, சபீத்தா எங்களை அன்பாய் கவனிப்பார்கள். அவர்கள் ராயபுரத்தில் இருந்ததால், கடலில் உள்ள அத்தனை உயிரினங்களும் உணவு மேஜையில் வாய்க்கு ருசியாக சமைத்து வைக்கப்பட்டிருக்கும். நானும், என் கணவரும் அங்குச் சென்றால் நன்றாக சாப்பிட்டு, சில வேலைகளில் அங்கேயே தங்கியும் விடுவோம். இத்துடன் என் கட்டுரையை இம்மாதம் முடிக்கிறேன். மீண்டும் நாம் அடுத்த இதழில் சந்திப்போம்.

# திறக்கப்பட்ட கண்கள்
## To See God's Providence

ஆதியாகமம் 21:19 “தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்”. தேவனுடைய உபகரணங்களைக் காணும்படி திறக்கப்பட்ட கண்கள். தாகத்தால் கண் மயங்கிய போது கர்த்தர் ஆகாரின் கண்களைத் திறந்தார். அவளுக்காகவும் அவள் மகன் இஸ்மவேலுக்காகவும் அவர் ஆயத்தம் பண்ணி இருந்த தண்ணீர் துரவைக் காணும்படி கண்களைத் திறந்தார். ஒன்றும் புரியாத நிலையில் வனாந்திரத்தில் தன் மகனை வைத்து தண்ணீர் கூட இல்லாமல் இருந்த ஆகாருக்கு ஒரு துரவைக் காணும்படி அவள் கண்களைக் கர்த்தர் திறந்தார். தேவன் நமக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற ஆசீர்வாதங்கள் ஏராளம். நம்முடைய கண்கள் குருடாக இருப்பதால், அவைகளை நம்மால் காண முடிவதில்லை. அல்லாவிட்டால் அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு நாம் தூரமாய் இருப்பதும் ஒரு காரணம். ஆசீர்வாதம் நம்மை தேடி

வரவேண்டுமானால், நாம்தான் அதற்குரிய வழிகளை அறிந்து அதற்காக ஆயத்தப்பட வேண்டும். கர்த்தர் தாமே நமக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற நீரூற்றை காணும்படி நம்முடைய கண்களைத் திறந்தருள்வாராக!

நான்கு குஷ்டரோகிகள் ஒலிமுக வாசலில் இருந்து எழுந்து புறப்பட்டு சீரியருடைய ராணுவத்தின் பாளையத்திற்கு போனார்கள். சீரியர் ஓடிப் போனதால், நான்கு குஷ்டரோகிகளும் பாளையத்திற்குள் பிரவேசித்து, புசித்து, குடித்து, உடுத்தி, பொன்னையும், வெள்ளியையும் எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டார்கள்.

**2) God's Protection** தேவனுடைய பாதுகாப்பைப் பார்க்கும்படி திறக்கப்பட்ட கண்கள்:

"அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான், உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார், இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும், இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்" 2 இராஜாக்கள் 6:17. எலிசாவின் வேலைக்காரனின் கண்களைக் கர்த்தர் திறந்தார். சீரிய ராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து, நம்முடையவர்களில் இஸ்ரவேல் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்க மாட்டீர்களா? என்று கேட்டான் அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன், ராஜாவே இஸ்ரவேலில் தீர்க்கரிசியாகிய எலிசா என்பவன் இருக்கிறான், நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் அவன் ராஜாவுக்கு அறிவிப்பான். உளவு சொல்ல நம்மில் ஒருவனுமில்லை என்றான். இதைக் கேட்ட சீரிய ராஜா அவன் எங்கே இருக்கிறான் அவனைப் பிடியுங்கள் என்று குதிரைகளையும், இரதங்களையும், பலத்த ராணுவங்களையும் அனுப்பினான்.

எலிசாவின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில் பட்டணத்தைச் சுற்றி இருக்கிற ராணுவத்தையும், குதிரைகளையும், ரதங்களையும் கண்டான். அப்பொழுது வேலைக்காரன், எலிசாவை நோக்கி ஐயோ, ஆண்டவனே என்ன செய்வோம் என்றான். தீர்க்கதரிசியாகிய எலிசா, பயப்படாதே அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். (2 இராஜாக்கள் 6:17).

எனக்கருமையானவர்களே பயப்படாதீர்கள், எலிசாவோடு இருந்தவர் பரம எலிசாவாம் நம் தேவன் எப்பொழுதும் நம்மைச் சுற்றி பட்டயம் ஏந்திய தூதர்களை காவலாய் வைத்து பாதுகாக்கிறவராய் இருக்கிறார்.

வானத்திலிருந்து பெய்த மழையினால் பூமியின் ஊற்றுக் கண்கள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு உலகத்தை அழித்த போது, கர்த்தர் நோவாவையும், அவன் குடும்பத்தினரையும் பேழைக்குள்



பாதுகாத்தார். "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது" என்று சங்கீதம் 91:7 சொல்கிறது. "உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்" ஏசாயா 54:17. எனவே, வாழ்க்கையில் போராட்டம் வந்தாலும், இப்பொழுதுள்ள நிலைமை வேதனைப்படுத்தினாலும், கர்த்தர் நம்மைக் காப்பார் என்ற விசுவாசத்தோடு வாழ்வோம்.

குருடாயிருந்த மாம்ச கண்கள் திறக்கப்பட்டன: God's Power

''இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள். அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்'' (மத்தேயு 9:27-30). ஆண்டவர் ஆவிக்குரிய கண்களை திறக்கிறவர் மாத்திரம் அல்ல, மாம்சப் பிரகாரமான, உலகத்துக்கடுத்த அற்புதங்களையும் செய்கிறவர். இச்சம்பவத்தில் பார்க்கிறோம்.

அது போன்றுதான் இன்றைக்கும் அற்புதர் இயேசுவை நம் கரத்திலேயே வைத்துக் கொண்டு கலங்கிக் கொண்டிருக்கிறோம். பெரியவர்கள் பழமொழி சொல்வார்கள் (வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதைப் போல்). நம் கர்த்தர் வல்லவர், பெரியவர், அற்புதர்! எனவே இயேசுவை விசுவாசிப்போம். எல்லா வேதனைகள், வியாதிகள் உபத்திரவங்களில் அனைத்திலும் இருந்து கர்த்தர் நம்மைக் காப்பாற்ற நம் ஆவிக்குரிய கண்களைத் திறப்போம், ஆமென்.

குருடராயிருந்த அம்மனிதர்களுடைய விசுவாசம், அவர்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய அற்புதம் வரக் காரணமாயிருந்தது. ஆனால், நன்கு பார்க்கக் கூடிய உணரக் கூடிய கிருபைகள் ஏராளமாய் நமக்கு கர்த்தர் கொடுத்திருந்தும் இன்னும் அவற்றை உணராமல், நாம் எதை, எதையோ பார்த்து, எதை, எதையோ செய்து வாழ்க்கையில்